காலணா Regd. No. M. 2811

சுதந்திரச் சங்கு


“சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக்கெல்லா மெடுத்தோதுவோமே”

வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா 4½ ரூபா

ஆசிரியர்:
சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

காரியாலயம்: பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. சனி 4-2-33

ஆமை-நத்தை ரேக்ளா



‘இந்தியாவின் முன்னேற்றம்’ என்ற ரோடு தொலை தூரத்தில் இருக்கின்றது. அந்த ரோட்டுப் பக்கம் போகாமல் வில்லிங்டன் துரை ஓர் மூலையைச் சுற்றிச் சுற்றி தமது ரேக்ளாவை ஓட்டிக் கொண்டிருக்கிறார். சுற்றியுள்ள கல்லுகளைக் கண்டு மைல் கணக்குப் போடுகிறார். ‘இன்னொரு மைல் கல்லைத் தாண்டி விட்டோம்’ என்று டேல்லியில் பேசினார். அவருக்கு மயக்கமா? அல்லது ஊரைத் தான் மயக்கப் பார்க்கின்றாரா?

வைஸ்ராய் வாய்ப் பந்தல்

பேசி விட்டார்! பேசி விட்டார்! யார்? யார்? வில்லிங்டன் துரை மகனுர். டெல்லி சட்ட சபையைத் திறக்கும்போது ஏதோ புதிதாக வைஸ்ராய் சொல்லப் போகிறுர் என்று ஒரு சிலர் காத்துக் கொண்டிருந்தனர். அவர்களெல்லாம் ஏமாறும்படியாக தமது பழைய பல்லவிகளையே பாடி வைஸ்ராய் பேசிய பேச்சை என்னென்று கூறுவது? கிராமபோன் பிளேட்டில் பழைய பிளேட்டா யிருந்து வரிகள் தேய்ந்து போயிருக்குமாயின், 'புஜக பூஷணார்ச்சித—ணார்ச்சித—ணார்ச்சித' என்று திருப்பத் திரும்ப அதே வார்த்தைகளைப் பாடிக் கொண்டிருக்கும். அப்போது ரஸிகர்களின் காதுகள் எவ்வளவு ருசியை அனுபவிக்குமோ அதே ருசியை வைஸ்ராய் பேச்சைப் படித்த போது நாமும் அநுபவித்தோம்.

நாட்டின் குடியானவர்கள் நிலையைப் பற்றி பிரஸ்தாபிக்கும்போதும், சட்ட மறுப்பு இயக்கத்தைப் பற்றிக் கூறும்போதும் வைஸ்ராயின் வர்ணனை எவ்வாறிருந்தது என்பதை அறிய வாசகர்கள் பிரியப்படுவார்களல்லவா? வைஸ்ராய் சொல்கின்றுர்:

"இந்தியாவை 'சுணக்கம்' என்ற மேக மூட்டம் சூழ்ந்து கொண்டிருப்பது உண்மையே. நாம் சேர்ந்துழைப்போமாளுல் அம்மேக படாம் மறைந்து, இந்தியா உலகில் சிறந்த நாடாக மிளிருமென்பது எனது நம்பிக்கை. தானியங்களின் விலை வாசிகள் மிகவும் குறைந்து போயிருப்பது வாஸ்தவமே. ஆனுல் கொஞ்சம் கொஞ்சமாக விலைகள் உயர்ந்து கொண்டே வருகின்றன. எங்கெந்த இடங்களில் அவசியமோ அங்கெல்லாம் நமது மாகாண துரைத்தனங்கள் குடியானவர்களுக்குக் கடன் கொடுத்தும், வரியை வஜா செய்தும் உதவி செய்து வருகின்றனர்"

கவிதா சக்தி மிகுந்தவர் போல இப்பகுதியைக் கூற ஆரம்பித்த வைஸ்ராய் கடைசியில் கூறி விட்டதன் கருத்துத் தான் நமக்கு விளங்க வில்லை. உதாரணமாக சென்னை மாகாணத்தின் குடியானவர்கள் ஸ்திதியைக் கவனிப்போம். நாளுக்கு நாள் வாய்தா நெருங்க நெருங்க தானியங்களின் விலை வரவர குறைந்து வருகின்றதே யன்றி ஏறுவதாகத் தோன்ற வில்லை. ஆனுல் டெல்லியிலுள்ள வைஸ்ராயின் கண்களுக்கு விலை வாசிகள் ஏறுவதாகத் தோன்றிக் கொண்டிருக்கிறது. குடியானவர்கள் வரிப்பளு தாங்க முடியாமல் அவதிப் படுகின்றனரென்பதைக் கண்டு, வரியில் எட்டிலொரு பங்கேனும் குறைக்க வேண்டுமென சென்னைச் சட்ட சபையில் ஓர் தீர்மானம் வந்த போது அந்தத் தீர்மானத்தைக் கூட சர்க்கார் உத்யோகஸ்தரான ரெவினியூ மெம்பர் எதிர்த்துப் பேசினுர். அதை நாம் மறந்து விடவில்லை. ஆனுல் வைஸ்ராயோ தமது மாகாண அதிகாரிகள் ஆங்காங்கு வரிகளைத் தள்ளிக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன ரென டெல்லியில் கூறுகின்றுர். என்ன முரண்பாடு?

பிறகு சட்ட மறுப்பு இயக்கத்தைப் பற்றிப் பேசும்போது வைஸ்ராய் என்ன கூறியிருக்கிறுர் தெரியுமா?

"சட்ட மறுப்பு இயக்கத்தை ஒழிக்க சர்க்கார் கைக்கொண்டுள்ள அடக்கு முறை வழிகளைக் குறைக்காததைக் கண்டு மிதவாதிகளும், சட்ட சபை அங்கத்தினர்களும் மெச்சுகின்றனர். ஆகவே தான் அடக்கு முறைச் சட்டத்தையும் அவர்கள் நிறைவேற்றினர். இந்த ஈரோட்டான காலமுள்ள வரையில் தான் அவசரச் சட்டங்கள் இருக்கப் போகின்றன வென்பதை உறுதி கூறுகின்றேன். சட்ட மறுப்புக்காரர்கள் அவர்களையு மறியாமல் தங்களைத் தாங்களே மாற்றிக் கொண்டு ராஜீய ஆக்க வேலையில் ஈடுபடுவார்களென்பது எனது நம்பிக்கை. அரசியல் முன்னேற்ற மென்ற பாதையில் நாம் தங்கு தடையின்றி போய்க் கொண்டிருக்கிறோம்." என்றுர்.

அடக்கு முறையை மெச்சி மிதவாதிகளும் சட்ட சபை அண்ணுத்தைகளும் பேசலாம். பொது ஜனங்கள் அபிப்பிராயம் என்ன, பெரும்பாலான பத்திரிகைகளின் அபிப்பிராய மென்ன வென்பனவற்றை வைஸ்ராய் அறிந்து கொள்ள வில்லை போலும். ஆறு மாதத்தில் சட்ட மறுப்பை அடக்கிப் போடுவதாக வீரம் பேசிய இந்த வைஸ்ராய் ஒரு வருஷம் கழிந்த பின்னரும், "ஈரோட்டான காலம் போகும் வரையில் தான் அடக்கு முறை இருக்கப் போகின்றது" என்று ஈனஸ்வரத்தில் கூறுகின்றுர். ஐயோ பாவம்!

மொத்தத்தில் வைஸ்ராய் பேசியவை யெல்லாம் வெறும் வாய்ப் பந்தல். வெறும் சக்கை; சாரமற்ற பேச்சு. தேச பக்தர்களின் உதவியின்றி, காங்கிரஸ் காரர்களோடு சமாதானமின்றி, காந்தியடிகளின் ஆசியின்றி, இவரது புதிய அரசியல் வண்டி எவ்வளவு தூரம் ஓடப் போகின்றது என்பதைப் பற்றி சொல்லவும் வேண்டுமா?

டில்லியில் தெனாலிராமன்

தெனாலிராமன் பொல்லாத பயல். அவனது உபத்திரவங்களை ராயரால் சகிக்க முடியவில்லை. ஒருநாள் தெனாலிராமன் ராயர் முன்பு போய் நின்றான். ராயருக்கோ அவன் மீது ஆத்திரம் பொங்கிக் கொண்டிருந்தது. உடனே அவர் வெகுண்டு வீழ்ந்தார். "அடே, தெனாலி ராமா! இனிமேல் என் கண் முன்னே உன் தலையைக் காட்டாதே!" என்று கூறி விரட்டினார். "ஆஹா, அப்படியேயுங்க" என்று சொல்லித் தெனாலிராமன் போய் விட்டான். கொஞ்ச நாட்கள் கழிந்தன. மீண்டும் ராயர் முன்னே தெனாலிராமன் தோன்றினான். ஆனால் அவன் தலைமட்டும் ஒருவருக்கும் தெரியவில்லை. விஷயம் என்னவென்றால் ஒரு பெரிய சட்டியைத் தன் தலையில் கவிழ்த்துக்கொண்டு வந்து நின்றான். "என்னடா, இது?" என்றார் ராயர். "அதானுங்க அன்னிக்கு நீங்க தலையைக்காட்ட வாணான்னீங்களே" என்று சட்டிக்குள்ளிருந்த தெனாலிராமன் வாய் சொல்லிற்று.

இத்தகைய சம்பவ மொன்று இப்பொழுது நாட்டில் நடந்திருக்கிறது. "சுப்பராயனின் ஆலயப் பிரவேச மசோதாவைப் பார்த்துப் பார்த்து வைஸ்ராய், "தலையைக் காட்டாதே" என்று அன்றைக்கு விரட்டினார். ஆனால் அதே மசோதாவே இப்பொழுது "ரங்கய்யரின் மசோதா" என்ற பெயருடன் மறுபடியும் டில்லி சட்ட சபையில் தலையை நுழைத்திருக்கிறது. இப்பொழுது அந்த மசோதாவைப் பிடித்துத்தள்ள வைஸ்ராய்க்கு மனம் வரவில்லை. வேறு வழியும் இல்லை. ஆகவே புதிய உடை தரித்து வந்த அந்தப் பழைய பேர்வழியை அவர் ஏற்றுக் கொண்டு விட்டார்.

இனி அதைப் பற்றிய சபையின் விவாதத்தையே உலகம் எதிர் நோக்கி நிற்கின்றது. இதை முதல் முதல் ஆலோசனைக் கெடுத்துள்ள தீவிர முயற்சிகள் நடந்து வருகின்றன. எரவாடாவில் மகாத்மாஜி தலைவர்களைக் கலந்து யோசிக்கிறார். வெவ்வேறு அங்கத்தினர்கள் நோட்டீஸ் கொடுத்துள்ள 14 மசோதாக்களையும் அவரவர்கள் நிறுத்தி வைத்துக் கொள்ள இசைந்தால் ரங்கய்யரின் ஆலயப் பிரவேச மசோதா அடுத்த மாதக் கடைசியில் விவாதத்திற்கு வரலாமென்று சொல்லப்படுகிறது. ஹரிஜன விஷயத்தில் டெல்லி சட்ட சபை எவ்வாறு தீர்ப்பளிக்குமோ பார்ப்போம்.

இது சகோதரர் சண்டை!

சிறைக் குள்ளிருக்கும் காந்திஜி தமது சக்தியனைத்தையும் எந்த வழியில் உபயோகிக்க முடியுமோ அவ் வழியில் உபயோகித்து வருகிறார். அவரை ஆதரித்து நாட்டினர் தீண்டாமையையொழிக்கும் இயக்கத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். எதிலும் 'குயுக்தி' கண்டு பிடிக்கும் பிரிட்டிஷ் கன்ஸர்வேடிவ்கள் (பிற்போக்காளர்) இதிலும் ஏதோ கண்டு பிடித்து விட்டனர். தீண்டாமை விலக்கு நுழைந்ததால் இந்தியா ராஜீயப் போரை மறந்து வருகின்றதாம். இது கண்டு அவர்கள் சந்தோஷிக்கிறார்களாம். ஆனால் தீண்டாமை இயக்கத்துடன், ராஜீய இயக்கங்களும் நாட்டில் நடந்து வருவதைக் காண அந்தப் பேர்வழிகளுக்குக் கண்ணில்லை போலும்!

நிற்க, "ஸ்காட்ஸ்மென்" என்ற சீமைப் பத்திரிகை யொன்று "தீண்டாமை இயக்கம் காரணமாக மகாத்மா காந்தி இது காறும் தமக்கு ஆதரவாக விருந்த ஜாதி ஹிந்துக்களின் துணையையும், ஒத்துழைப்பையும் இழந்து வருகிறார்" என உளறிக் கொட்டி யிருக்கிறது. ஆறாயிரம் மைல்களுக் கப்பால் சௌக்கியமாக உட்கார்ந்துகொண்டு பேனாவை ஒட்டும் அதன் ஆசிரியருக்கு இந்தியாவின் உண்மை நிலைமை என்னமாகத் தெரிய வரும்? அதை அறிந்து கொள்ளவும் அவர் முயற்சிக்க மாட்டார். ஆகவே எதையோ வைத்துக் கொண்டு கயிறு திரித்து விட்டார். ஹரிஜன சேவையில் மும்மரமாக ஈடுபட்டுள்ளவர்களில் பெரும்பாலோர் ஜாதி ஹிந்துக்களே யென்பதை அவர் அறிந்து கொள்ளவில்லை. உண்மையை அவர் அறியாமல் போனால், சும்மா கிடக்கிறது தானே. ஏன் வாய்க்கு வந்தபடி பிதற்றித் திரிய வேண்டும்? அப்படியே இங்கு எங்களுக்குள் ஆயிரம் பிரிவினைகளும், சண்டை சச்சரவுகளும் இருக்கிறதாகவே வைத்துக் கொண்டாலும், அதைப் பற்றிப் பேச இந்த "ஸ்காட்ஸ்மென்" யார்? அதற்கு இந்தியாவைப் பற்றி பிரசாரம் செய்ய என்ன உரிமை இருக்கிறது? பிரிந்து கிடந்தாலும் சண்டை யிட்டாலும் இந்தியருக்கு ஒன்று படத் தெரியும். இந்த அன்னியப் பத்திரிகையான "ஸ்காட்ஸ்மென்" வாயை மூடிக்கொண்டு கிடக்குமாக!

ஓர் தாயின் வயிற்றிற் பிறந்தோர்—தம்முட்
சண்டை செய்தாலும் சகோதரரன்றோ?

வெள்ளையர் விஷமம்

விஷமஞ் செய்வதில் கல்கத்தா ஐரோப்பிய சங்கத்துக்கு ஒரு திருப்தி. இன்று இந்தியாவில் அவசரச் சட்டங்கள் பயங்கரமாகத் தாண்டவ மாடுவதற்கும், வங்காளத்தில் ஆயிரக் கணக்கான வாலிபர்களை விசாரணையுமின்றி சிறையில் தள்ளும் ஆள் தூக்கிச் சட்டம் நர்த்தனம் புரிவதற்கும் இது போன்ற இன்னும் பல விஷயங்களுக்கும் கல்கத்தா ஐரோப்பிய சங்கத்தினரே மூல காரண மாவார்கள். இன்று சீமையில் வாயில் வந்தவாறு காந்திஜியைத் திட்டிக் கொண்டு அலைகின்ற ஸர் வாட்ஸன் இந்த கல்கத்தா சங்கத்தின் கடையாணி போன்றவன். கேட்பானேன் இந்த சங்கத்தைப் பற்றி?

ஷை சங்க வருஷாந்திரக் கூட்டத்தில், வயிறு நிறைய கண்டதையும் கேட்டதையும் திணித்து தாகசாந்தி செய்து கொண்ட பின்னர் தாராளமாக நாவை அவிழ்த்து விட்டு அந்தச் சங்கத்தின் தலைவன் கரி மார்கன் ஒரு விஷமப் பிரசங்கம் செய்திருக்கின்றான். அப் பிரசங்கத்தில் அவன் சொல்வதாவது:—

"வங்காளத்திலுள்ள நிலைமையின் காரணமாக சட்டம், ஒழுங்கு இவற்றைப் பரிபாலிக்கும் போலீஸ் இலாகாவின் ஆதிக்கத்தை சட்ட சபைக்கு மாற்ற முடியாது. அந்த அதிகாரம் வழங்கப் படாமற் போனால் 'மாகாண சுய ஆட்சி' என்ற பெயருக்கே இடமில்லை. ஆகவே வங்காளம் சம்பந்தப்பட்ட வரை, நாடு பத்திரமாகும் வரை மாகாண சுயாட்சியைத் தரலாகாது" என்று பொறுப்பற்ற தனமாக ஓர் விஷம ஆலோசனையை சர்க்காருக்கு ஷை கரி மார்கன் சொல்லி யிருக்கின்றான்.

இந்திய மாகாணங்களுக்கு மாகாண சுயாட்சி வரப் போகின்றதோ அல்லது யானை குட்டி போட்ட கதையாக முடியப் போகின்றதோ அது வேறு விஷயம். ஆனல் வங்காளிகளின் மனது புண்ணுகுமாறு, வேணுமென்றே குத்தலாக, ஏதோ தான்தான் ஸர்வசக்திமானென நினைத்துக் கொண்டு ஒரு ஐரோப்பியன் பிதற்றுவதென்றால் அதை யாரால் சகிக்க முடியும்? வங்காளத்தில் ஏற்பட்டுள்ள கஷ்டங்களுக்கெல்லாம் மூலகாரணம் இந்த கல்கத்தா வெள்ளையர் சங்கம் தான். இந்த குறும்புத்தனமுடைய வெள்ளையர்களின் கூத்தை சர்க்கார் சற்று அடக்குவார்களானல் வங்காளத்தின் பிடைகள் அன்றோடு தீர்ந்து போகும். அமைதிக்கு இதுவே வழி.

லக்ஷம் பேர் போஜனம்

மூன்றாவது வட்ட மேஜையின் பயனாக இந்தியாவின் பணத்தில் லக்ஷத்துத் தொண்ணூறு ஆயிர ரூபாய்க்கு உலை வைத்து விட்டார்கள். இத்தனை பணமும் எதற்காகச் செலவாயிற்று? யாரோ சுமார் இருபது பெயர்களுக்கு,—பெண் இனமு முண்டு,—போக வரச் செலவுக்காகவும், அவர்கள் சாப்பாட்டுச் செலவுக்காகவும் இத்தனை பணமும் செலவிடப்பட்டது. அப்படிக்கிருக்க ஹிந்து ராஜாக்கள் லக்ஷப் பிராம்மண போஜனம் நடத்தினார்களென்றும், பார்ப்பனர்களையும், பண்டாரங்களையும் உட்கார வைத்துச் சோறு போட்டு காசை விணடித்தார்களென்றும் குறை கூறுவதற்கு யாருக்காவது இனி மேல் வாய் இருக்கிறதா? இந்த இருபது பேருக்குச் செலவிட்ட அந்தப் பணத்தைக் கொண்டு இந்திய துரைத்தனம் லக்ஷத்துத் தொண்ணூராயிரம் ஏழைகளுக்கு மேல் சமாராதனையால் சோறு போட்டிருக்கலாம். அதனால் நஷ்டம் எதுவும் ஏற்பட்டிருக்காது. ஆனல் அத்தனை ஏழைகளின் ஆசீர்வாதத்தால் இந்தியாவுக்கு நன்மை யேற்பட்டிருக்கும். இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் ஒற்றுமை ஏற்படுவதற்கும் அநுகூலமா யிருக்கும். இந்த இரட்டைப் பிள்ளைகளான சாப்ரூ, ஐயகர் சம்பாதித்த 'நல'த்தை விட அதிக நலம் கிட்டி யிருக்கு மென்பதில் ஐயமில்லை. இந்த இரண்டு பேருமே சமீபத்தில் தாங்கள் அடைந்த வெற்றியை அவிழ்த்து விட்டிருக்கிறார்கள். வட்ட மேஜையில் உருப்படியாக எந்த முடிவும் ஏற்பட வில்லை யென்றும், ஆனல் இந்தியாவுக்கு எதெது தேவை யில்லையோ அதைப் பற்றி ஒரு வேளை முடிவு செய்திருக்கலா மென்றும், எதெது அத்தியாவசியமோ அவைகளை வெள்ளைக் கடுதாசிக் காரர்கட்கும், தனிக் கூட்டுக் கமிட்டிக்கும் (Joint Select Committee) பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்கும், பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கும் விட்டு விடப்பட்டன வென்றும் சொல்லி ஒரு குரல் அழுது ஒப்புக் கொண்டு விட்டார்கள்.

—அமிர்த பஜார் பத்திரிகை.

பொன்னி போகின்றாள்!

தாது வருஷத்துப் பஞ்சம் என்று கிழவர்கள் வருணிப்பார்கள். அந்த தாது வருஷப் பஞ்சம் நான்கு வருஷத்துக்கு முன்னமேயே வந்து கொண்டிருக்கிறதோ என்று சிலர் சொல்கின்றார்கள். இப்போது நாட்டில் ஏற்பட்டிருப்பது பணப் பஞ்சம். இது முற்றினால் என்னவாகுமோ யார் கண்டது?

வாய்தா தருவதற்கு வழியற்ற ஏழைகள் பெண்டாட்டி கழுத்திலும், கையிலுமுள்ள தங்க நகைகளை அப்படியே பிடுங்கிக் கொண்டு போய் கடைத் தெருக்களில் விற்று வருகிறார்கள். அந்தத் தங்கம் தான் பிரதி வாரமும் பம்பாயில் கப்பலேறி இந்தியாவை விட்டு நகர்ந்து கொண்டே யிருக்கிறது. நாளுக்கு நாள் இந்தியாவின் தங்கம் நகர்ந்த வண்ணமே யிருக்கிறது. தங்கத்தை இழக்கும் நாடு தரித்திர நாடு என்று சொல்லவும் வேண்டுமா? பிரிட்டனில் 'தங்க கலாட்டா' தோன்றிய தினத்தினின்று போன வாரம் வரையில் இந்தியா ஏற்றுமதி செய்திருக்கும் தங்கம் சுமார் 110 கோடி ரூபாய் மதிப்புடையது என்று கணக்கு கிடைத்துளது. இந்த 110 கோடி ரூபாய் திரும்பி நமது நாட்டுக்கு வரப்போகின்றதா?

வாஸ்தவமாக பிரிட்டிஷ் சர்க்காருக்கு இந்தியாவிடம் அநுதாப மிருக்குமானால் இந்தத் தங்க ஏற்றுமதியைத் தடை செய்திருக்க வேண்டும். அவ்வாறு செய்தார்களா? இல்லை. ஆயினும் வைஸ்ராய் வில்லிங்டனே அன்று சட்ட சபைப் பேச்சில் கூட

"இந்தியாவில் ரிஸர்வ் பாங்கி ஒன்று வைக்க வேண்டும். இது ரொம்ப அவசியம்" என்று கூறியிருக்கிறார்.

தேசத்திலுள்ள தங்கத்தை யெல்லாம் அமெரிக்காவுக்கும், பிரிட்டனுக்கும் மூட்டை கட்டிக் கொடுத்துவிட்டு அப்புறம் மண்ணாங் கட்டியை மூலதனமாக வைத்து ரிஸர்வ் பாங்கி வைக்கப் போகின்றாரா? இந்த பணப் பஞ்ச காலத்தில் ஒரு தம்படி கூட நாட்டை விட்டுப் போகாதவாறு பார்த்துக் கொள்வதும், இந்திய ரிஸர்வ் பாங்கிக்காக இப்போதிருந்தே தங்கம் சேமிப்பதும் வில்லிங்டன் துரைத்தனத்தின் கடமையல்லவோ? இந்தியா சரித்திரத்தில் வில்லிங்டன் தவறுதல்களில் இந்த 'தங்க ஏற்றுமதி'யை அநுமதித்திருப்பது போன்ற தவறு வேறில்லை; மடமையும் வேறில்லை.

அக்பரா? விக்டோரியாவா?

தேசத்திற்கேற்றதான 'கல்வி முறை'யில்லாது போனால், தேசத்திற்கோ அல்லது மாணவர்களுக்கோ ஏற்றதாக பாட புத்தகங்கள் மட்டும் இருக்குமா? இந்தியாவின் நான்கு எல்லைகளும் சரிவரத் தெரியாமல் போனாலும், இந்நாட்டை ஆண்ட ஆதி மன்னவர்களின் சரித்திரத்தை அறியாமல் போனாலும், இங்கிலாந்திலுள்ள தேம்ஸ் சாக்கடையின் நீளத்தையும், ஆழத்தையும் கண்டு தெரிய வேண்டுமென்றும், ஹென்ரிக்களையும், சார்லெஸ் ராஜாக்களையும் பற்றிப் படிக்க வேண்டுமென்றும் இந்திய மாணவனை வற்புறுத்துகின்றார்களே இது தானா 'கல்வி முறை? மேனாட்டுக் கல்வி முறை என்பதே பெரிய மாயவலை. அவ்வலையின் முக்கியாம்சமான சென்னை சர்வ கலாசாலைக்காரர்கள் 1935-ம் ஷ்டு நடத்திய பீ.ஏ. பரீக்ஷைக்குச் செல்லும் மாணவர்களுக்கு ஆசிரியர் ராதாகிருஷ்ணன் அவர்களால் எழுதப்பட்ட "ஹிந்துஸ்தானத்தின் ஹிருதயம்" என்ற புத்தகம் தகுந்தல்ல வென்றும், மேனாட்டுக்காரர் ஒருவர் எழுதியுள்ள "விக்டோரியா மகாராணி" என்ற புத்தகமே ஏற்றதென்றும் தீர்மானித்திருப்பதில் ஆச்சரியமென்ன விருக்கிறது? மாலிஸன் என்பவரால் எழுதப் பெற்றுள்ள "அக்பர் சரித்திரத்"தை யாவது பாடமாக வையுங்கள்" என ஒருவர் கரடியாகக் கத்தினார். 'மாலீஸன்' என்பவரும் ஆங்கில ஆசிரியர் தான். ஆனால் அதையும் அந்தச் சர்வ கலாசாலைச் சபை ஏற்கவில்லை. எப்படி ஏற்கும்? அக்பர் ஆட்சியின் நீதி முறைகளை யெல்லாம் நம் மாணவர்கள் தெரிந்து கொள்ளலாமா? கூடவே கூடாது. "ஸ்வதந்திர எண்ணங்கள்" என்ற மற்றொரு புத்தகத்தின் பெயரும் அடிக்கப்பட்டு விட்டது. கடைசியில் பி. ஏ. மாணவர்கள் "விக்டோரியா ராணி கதை"யையே படித்துத் தீரவேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. தேசியத்திற்குச் சற்றுமே இடமில்லாத இத்தகைய கல்வி முறையைத் தொலைத்தா லன்றி தேசத்திற்கோ, தேசத்தின் ஞானத்துக்கோ கதி மோக்ஷ மில்லையென தேசத் தலைவர்கள் கூறி வருவதில் என்ன ஆச்சரியமிருக்கிறது?

சென்னை சர்க்கார் தூக்கம்

"ஒரு நகரம் அல்லது கிராமத்திலுள்ள எந்தப் பொது ரஸ்தாவிலும் எந்த வகுப்பைச் சேர்ந்தவனும் நடந்து செல்வதிலும், பொதுக் காரியாலயங்கள், குளங்கள், கிணறுகள், இதர பொதுவான ஸ்தாபனங்கள், கட்டிடங்கள் இவற்றை ஜாதி ஹிந்துக்களுக்குள்ள அதே உரிமைகளுடன் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் உபயோகிப்பதிலும் தங்களுக்கு யாதொரு ஆட்சேபணையு மில்லை. இதைக் கவர்ன்மெண்டு ஏற்றுக் கொண்டு, பகிரங்கப்படுத்த வேண்டு மென இந்தச் சட்ட சபை தீர்மானிக்கின்றது" என்று ஒரு தீர்மானத்தை சென்னை சட்ட சபை 1924-ம் வருஷம், ஆகஸ்டு மாதம், 25உ யன்று நிறைவேற்றியது. இதைத் தாங்கள் ஒப்புக் கொண்டு விட்டதாக, 1924-ம் ஆு செப்டம்பர் மீ 25உ வெளியான L.M. உத்தரவு நெ. 2660 மூலம் சர்க்காரும் பகிரங்கப் படுத்தினர். மேற்படி தீர்மானம் நிறைவேறி இப்பொழுது எட்டு வருஷங்களாகி விட்டன.

ஆனால் இன்னமும் அது ஏட்டளவிலேயே இருக்கிறது. தங்களால் ஒப்புக் கொள்ளப் பட்ட தீர்மானத்தையே என் சர்க்கார் தலையின் கீழ் மடித்து வைத்துக்கொண்டு தூங்குகிறதோ தெரியவில்லை? சில கிராமங்களில் போஸ்டாபீசினருகே ஏழை ஹரி ஜனங்கள் போகக் கூடாதென்றும், பள்ளிக்கூடங்களில் சேரலாகாதென்றும் பலவிதமான அநீதிகள் இருந்து வருகின்றன வென்பது உலகறிந்ததே. ஒன்று மில்லாததற் கெல்லாம் கிராமங்களில் ஆர்ப்பாட்டங்கள் செய்து வரும் ரெவினியூ அதிகாரிகளுக்கும், இதர கிராம உத்யோகஸ்தர்களுக்கும் இத் தீர்மானத்தைக் கிரியாம்சையில் கொண்டு வருமாறு என் சர்க்கார் தாக்கீது அனுப்பக் கூடாது? வெறும் காற்றில் பறக்க விடுவதற்காகவா சட்ட சபை அந்தத் தீர்மானத்தைச் செய்தது என்று சென்னை அரசாங்கத்தைக் கேட்கிறோம். போனது போகட்டும். தீண்டாமையைச் சுட்டெரிக்க நாட்டில் பெரு முயற்சி நடந்துவரும் இந்தச் சமயத்திலாவது குறைத்தனம் தூக்கத்தினின்று எழுந்து, கண்ணைத் துடைத்துக் கொண்டு தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டு வருமா?

வாய்தாச் சுருக்கும், அழுகுரலும்

வாய்தாச் சுருக்கு விவசாயிகளின் கழுத்தை நெருக்குகின்றது. கிராமங்களில் எங்கு பார்த்தாலும் அவர்களின் அழுகுரலே கேட்கின்றது. களத்தில் கொஞ்சம் நெல்லும், வீட்டில் கொஞ்சம் நெல்லுமாக அவர்கள் கையில் காலணா யில்லாமல் தத்தளிக்கிறார்கள். வாய்தா விசாரமே பெருத்த விசாரமாகப் போய் விட்டது. தஞ்சை ஜில்லாவிலுள்ள 'படே படே' மிராசுதாரர்களின் கதியே அதோகதியா யிருக்கிறதென்றால் மற்ற ஊர்களிலுள்ள விவசாயிகளின் தவிப்பை எவ்வார்த்தைகளால் வெளியிடுவது? நாச்சியார் கோவிலில் மிராசுதாரர்க ளெல்லாம் ஒன்று கூடி அழுதிருப்பதைக் கவனியுங்கள்:

ஸ்ரீ கந்தசாமி மூப்பனார்: "மிராசுதாரர்களை பாங்கிக்காரர்கள் கூட நம்ப மாட்டோ மென்கிறார்கள்; அவமதிக்கிறார்கள்; அங்கு கூட கடன் கிடைக்க மாட்டே னென்கிறது. மிராசுதாரர்கள் வெட்கத்தினாலும், துக்கத்தினாலும் தங்கள் உண்மை நிலைமையை வெளிக்காட்டவில்லை"

ஸ்ரீ வெங்கட்டராம நாயுடு: "100க்கு 25, அல்லது 12 வீதம் கூட தீர்வையைக் குறைக்காவிட்டால் சர்க்கார் நெல்லையே வாய்தாவுக்காக அளந்து கொண்டு போகட்டும். அவர்கள் கணக்குப்படியே கலம் நெல் ரூ. 1-14-6 வீதம் எடுத்துக் கொள்ளட்டும். வரியைக் குறைத்தா லல்லாது மிராசுதாரர்கள் உயிருடனிருக்க முடியாது."

ஸ்ரீ ரத்தனசபாபதி பிள்ளை: "சரி, நானும் அழுகிறேன். இன்னும் 10ஆு பொறுத்து சர்க்கார் வாய்தாவைத் தவணையாக பிரெஞ்சு கவர்ன் மெண்டைப் போல் வசூலிக்கலாம். சர்க்காருக்குச் செலவுக்கு வேண்டுமானால் டிபெஞ்சர் கடன் வாங்கிக் கொள்ளட்டும். சர்க்காரில் வேலை பார்க்கிறவர்கள் நெல்லையே சம்பளமாகப் பெறட்டும்."

நிற்க, தஞ்சை ஜில்லாவை தஞ்சை அரசனிடமிருந்து பெற்றுக் கொள்ளும்போது சாச்வத விதிதமாக (Permenent settlement) வரி வாங்குவோ மென கிழக்கிந்தியக் கம்பெனி ஒப்பந்தம் செய்து கொண்டது. வேலிக்கு 35 ரூ. வரி விதித்தது. இப்போது அந்த ஒப்பந்தத்தை தூக்கி யெறிந்ததுமன்றி வேலிக்கு 70 ரூ. வசூலிப்பது என்ன நியாயமோ?

எதேச்சாதிகாரத்தை எதிர்க்க

பர்மாப் பிரிவினை விஷயத்தில் பொதுஜன அபிப்பிராயத்தை மிதித்துத் துவைக்க பிரிட்டிஷ் சர்க்கார் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறது. 'தாயிடமிருந்து சேயைப் பிரிப்பது' போல இந்தியாவினின்று பர்மாவைப் பிரிக்கும் விஷயமுமாகும்' என்று எண்ணுகின்ற பர்மிய மக்கள் இவற்றை யெல்லாம் கண்டு எங்ஙனம் சகித்துக் கொண்டிருக்க முடியும்? ஆகவே அவர்கள் பொங்கி யெழுந்து விட்டனர். "பர்மாவைப் பிரிக்கக் கூடாது" என்று அவர்கள் இந்தியா மந்திரிக்கும், வைஸ்ராய்க்கும் தந்தி யடித்திருக்கிறார்கள். இந்தியாவைக் கலந்து கொள்ளாமல் மேல் கொண்டு எந்தக் காரியத்தையும் தொடங்க பர்மா இஷ்டப்படவில்லை யாதலால், இரண்டு தேசங்களின் தலைவர்களும் இன்றைய தினம் புதிய டில்லியில் கூடி ஆலோசித்துக் கொண்டிருப்பார்கள். பிரிவினை வேண்டுமா, வேண்டாமா வென்பதை நிர்ணயிக்கவே சமீபத்தில் பர்மாவில் பொதுத் தேர்தல் நடந்தது. பிரிவினை வேண்டாதாரையே பெருவாரியாகத் தெரிந்தெடுத்ததன் மூலம் பர்மியர்கள் அவ்விஷயத்தில் தங்கள் மனக் கருத்தைத் தெளிவாக்கினர். ஆயினும் எதையும் மதியாது பிரிட்டிஷ் துரைத்தனம் தான் போன போக்கே செல்வது அதன் எதேச்சாதிகார சுபாவத்தையே காட்டுகின்றதல்லவா? எனினும் தன் திராணியுள்ள வரை இந்தச் சூழ்ச்சியை எதிர்த்துப் போராட பர்மியர் தீர்மானித்திருக்கின்றனர். இன்று டில்லியில் கூடும் மகாநாட்டின் முடிவிற்காக பர்மா காத்துக் கொண்டிருக்கிறது.

ஹரிஜன சத்தியாக்கிரகம்?

ஹரிஜனங்களுக்குக் கோயில் பிரவேச உரிமை அளிக்கப்படா விட்டால், முன்பு மகாத்மாஜியின் உத்தரவுக் கிணங்கி நிறுத்தி வைக்கப்பட்ட சத்தியாகிரகத்தை நாங்கள் ஆரம்பித்து விடுவோம். டாக்டர் சுப்பராயன் மசோதாவிற்கு அனுமதி கொடுக்க மறுத்ததன் மூலமாக வைஸ்ராய் ஹரிஜனங்களுக்குப் பெருத்த தீங்கிழைத்து விட்டார்; ரங்கய்யரின் மசோதாவை பொறுக்குக் கமிட்டிக்கு விட அவர் யோசித்துக் கொண்டிருப்பதானது சட்டம் ஏற்படும் காலத்தைக் கடத்துவதாகவே இருக்கின்றது.

—ஹரிஜனத் தலைவர் ராஜபோஜ்.

நாவல் குப்பைத் தொட்டி

நவீன உலகத்தை சுலபமாக நாவல் ஆசிரியர்கள் ஏய்த்து விடுகின்றனர். பக்கம் பக்கமாக வரைந்து தள்ளி, கொலை, விபசாரம், துப்பறிதல் போன்று ஏதேதோ விஷயங்களைப் புகுத்தி சிலர் பிழைக்கின்றனர். ஆனால் உண்மைப் பேராசிரியர்களோ வெகு குறைவாக எழுதினர்களாயினும் உன்னத முறையில் எழுதப்பட்டன வாதலால் அவை இலக்கிய உலகை அலங்கரித்துக் கொண்டு இருக்கின்றன.

உதாரணமாக 'கிரே' என்ற ஆங்கிலக் கவிஞன் 'கோயில் மைதானம்' என்ற ஏதோ சில வரிகளைத் தான் எழுதினன். பதினெட்டு வருஷம் அதை வெளியிடாம லிருந்து, அவ்வப்போது அதைத் திருத்தி அழகு செய்த பின்பு வெளி யிட்டான். அவன் எழுதிய வரிகள் இலக்கியப் பூஞ்சோலையில் நறு மணத்தோடு இருந்து கொண்டிருக்கின்றன.

சமீப காலத்தில் இங்கிலாந்தில் எட்கார் வாலெஸ் என்று ஒரு நாவல் ஆசிரியன் இருந்தான். வருடந்தோறும் அவனது நாவல்கள் 20 லக்ஷம் வீதம் விற்றுக் கொண்டிருந்தனவாம். லக்ஷம் லக்ஷம் பவுன்களாக சம்பாதித்த அவன் குதிரைப் பந்தயத்தில் அத்தனையையும் தொலைத்து விட்டு துர் மரணமாகப் போன வருடத்தில் செத்தான். "முன்னே வாரத்திற்கு இருநூறு வீதம் எட்கார் வாலஸ் நாவல்கள் விற்றுக் கொண்டிருந்தன. இப்போது 2 பிரதிகள் விற்பதே லாட்டரியா யிருக்கின்றது" என்ற ஓர் புத்தகக் கடைக்காரர் "லண்டன் கிரானிகள்" நிருபரிடம் சொல்லி யிருக்கிறார்.

இத்தகைய உதாரணங்கள் தமிழ் நாட்டிலும் கிடைக்கும். புறநானூறு போன்ற நூல்களில் மிகச் சில வரிகளே எழுதிய ஆசிரியர்களும் சாகா வரம் பெற்று வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். 'நாவல்' உலகத்திலும் ஒரு ராஜம் அய்யரும், ஒரு மாதவையாவும் ஒவ்வொரு புத்தகமே எழுதினர்களாயினும் அவை வெகு அழகாக இருந்து வருகின்றன. ஆனால் தமிழ் நாட்டையே கவளீகரித்து விடுவது போல வீசைக் கணக்கில், மணுக் கணக்கில் நாவல்களை வரைந்து தள்ளியவர்களு முண்டு. ஆனால் அவர்கள் உயிர் நீங்குவதற்கு முன்னடியே அவர்கள் எழுதிய புத்தகங்கள் செத்துப் போய் விட்ட பரிதாபங்களை தமிழ் நாட்டில் கண்டு வருகின்றோம்.

சாகா வரமுடைய பல நூல்களைத் தமிழர் எழுதுவது எந்நாளோ?

நமது கிளிஞ்சல் குவியல்

பம்பாயில் காங்கிரஸ் காரியத்தில் ஈடுபட்ட தற்காக ராமதாஸ் பிரதாப்பும், இன்னும் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

நாகபுரியில் சுயேச்சை தின சம்பந்தமாக இருவருக்கு முறையே 12, 9 மாதங்கள் சிறை.

கல்கத்தாவில் ஊர் வலம் சென்றதற்காக 12 வாலிபர்கள் கைது செய்யப்பட்டனர்.

பம்பாய் மாகாண பொதுக் காரியதரிசியான ஸ்ரீமான் S. K. படீல் என்பவருக்கு கிரிமினல் லா சட்டப்படி இரண்டு குற்றங்களுக்கு $2\frac{1}{2}$ வருஷம் தண்டனை.

மதுரையில் சுவர்களில் மூவர்ணத்தால் பூசிக் கொண்டிருந்த போது ஒரு தொண்டர் கைது செய்யப்பட்டு பிறகு எச்சரிக்கையின் பேரில் விடுவிக்கப்பட்டார். விதேசி ஜவுளிக் கடை மறியல் செய்த 4 தொண்டர்களை பிரம்பினால் அடித்துக் கலைத்து விட்டனர்.

நமது 'சங்கு' காரியாலயத்தினின்று அடுத்த 6ஆயில் "ஜன்ம பூமி" என்ற தெலுங்கு வார மும்முறைக் காலணா பத்திரிகையை மீண்டும் வெளியிட ஏற்பாடு செய்திருக்கிறோம். அன்பர்கள் ஆசி கூறுக!

சுயேச்சை தின சம்பந்தமாக கல்கத்தாவில் கார்ப்பொரேஷன் கல்வி அதிகாரி முதலிய 49 பேருக்கு தலா 3 மாதம் சிறை.

பாட்னாவில் இருவருக்கு தலா 15 மாதமும், 19 பேருக்கு தலா 4 மாதமும் தண்டனை.

சென்னை கேவல்ராம் செல்லாராம் ஜவுளிக் கடையில் மறியல் செய்த 4 தொண்டர்களை போலீசார் அடித்துக் கலைத்து விட்டனர்.

குடகில் சுயேச்சை தின சம்பந்தமாக கூட்டத்தில் கலந்து கொண்ட 7 ஹரிஜன தொண்டர்களுக்கு தலா 3 மாதம். மூவருக்கு தலா 6 மாதம் கடுங்காவலும், 50 ரூ. அபராதமும்.

ரயில் வண்டியை நிறுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் சங்கிலியை இழுத்து ரயிலை நிறுத்துபவர்களுக்கு 6 மாதம் அல்லது அபராதம், அல்லது இரண்டும் என்று டெல்லி சட்ட சபையில் ஓர் தீர்மானம் வருகிறது.

ஹரிஜன ஊழிய சங்கத்தின் ஆதாவில் மகாத்மாவின் ஆசிபெற்று "ஹரிஜனம்" என்ற பெயருடன் பம்பாயினின்று ஒரு ஆங்கில வாரப் பத்திரிகை ஆரம்பிக்கப்படும்.

"ஹரிஜனப் பிரச்னைக்காக எனது உயிரையும் அர்ப்பணம் செய்வேன். இன்றைய தினம் அவர்கள் கொடுமையாக நடத்தப் பட்டாலும், நாளைய தினம் அவர்கள் மரியாதை செய்யப் படுவர். ஆகவே பொறுமையை இழக்க வேண்டாம்" என்று மகாத்மா ஒரு ஹரிஜன நண்பருக்கு எழுதியிருக்கிறார்.

ஹரிஜனங்களுக்குத் தனிப் பள்ளிக்கூடம் கூடா தென்றும், பொதுப் பள்ளிக்கூடத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டு மென்றும், எந்த ஸ்தாபனத்திலும் ஜாதி வித்தியாசம் பாராட்டக் கூடா தென்றும் செங்கல்பட்டு ஜில்லா போர்டு தீர்மானித்திருக்கிறது.

ஸ்ரீமான் பட்டவர்த்தன் விஷயமாக மகாத்மாஜி ஒருநாள் உபவாஸ மிருந்ததைக் குறித்து கவர்ன்மெண்டார் கூடிய சீக்கிரம் ஒரு அறிக்கை வெளி யிடுவார்களெனத் தெரிகிறது. சிறையில் ராஜீயக் கைதிகள் தாங்களாகவே தோட்டி வேலை செய்ய முற்படுவது அநுமதிக்கப்பட வேண்டுமென அவ்வறிக்கை கூறலாம்.

கல்கத்தாவில் $1\frac{1}{2}$ லக்ஷம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட கோயில் ஒன்று ஹரிஜனங்களுக்குத் திறந்து விடப்பட்டது.

துணி, எண்ணெய், உணவு முதலியன சரிவர கொடுக்கப் படாததினாலும், ஜெயில் அதிகாரிகள் கொடுமையாக நடத்துவதாலும் கூடலூர் ஜெயிலில் 40 பி. வகுப்பு ராஜீயக் கைதிகள் உண்ணா விரதம் தொடங்கி யிருப்பதாகத் தெரிகிறது.

ஸ்ரீமான் பி. கேசவன் நாயர் கள்ளிக்கோட்டை சிறையில் ஜனவரி 4-ந் தேதி முதல் உண்ணா விரத மிருந்ததை நிறுத்தி விட்டார்.

பண்டித மாளவியாவுக்கு 104 டிகிரி ஜுரம். பூர்ண ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டு மென்று டாக்டர்கள் யோசனை கூறுகின்றனர்.

சிறையில் காந்திஜியைக் கண்டு பேச இந்தியா சட்ட சபை அங்கத்தினர்களில் இருவரை நியமிக்கும்படி ஸ்ரீமான் ரங்கய்யர் ஒரு தீர்மானம் கொண்டு வர விருக்கிறார்.

Edited and Published by S. Subramaniam and
Printed by M. R. Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras.